# இரும்புப் பாத்திரங்கள் செய்வதில் நிபுணர் கொங்கணவர்

திருமதி க. வெண்ணிலா
கௌரவ விரியுரையாளர்,
தமிழ்த்துறை
அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரி, கொடைக்கானல்,

21

**ஆய்வுச்சுருக்கம்**

சித்தர்கள் என்பவர்கள் சித்தத்தை உடையவர்கள், நிலைத்திருக்கும் பேரறிவு படைத்தவர்கள், நிறைமொழி மாந்தர்கள், அறிஞர்களும் ஆவர். மருத்துவம், யோகம், சோதிடம், மந்திரம், இரசவாதம் போன்ற அரிய அறிவியல்களைத் தந்தவர்கள் சித்தர்கள் என அழைக்கப்பட்பனர். சித்தர்கள் தன்னலமற்ற வாழ்க்கையை வாழ்ந்தவர்கள். அவர்கள் உண்மை, நேர்மை, கருணை, அன்பு, தூய்மையான வாழ்க்கையை வலியுறுத்தினவர்கள் சாதிபேதத்தைக் கடந்தவர்கள். உலககில் உள்ள அனைத்து உயிர்களும் நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டு வாழ்ந்தவர்கள். இவர்களைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் ஆய்வுச் சுருக்கமாக அமைந்துள்ளது.

**கலைச்சொற்கள்** : சித்தர்கள், இரசவாதம், கோரக்கர் , கொங்கணவர்.

**முன்னுரை**

சித்தர்கள் என்பவர்கள் பொது வாழ்க்கை நெறிக்கு உடன்படாதவர்களாகத் தங்களுக்கென்று தனி வாழ்வியல் வழி முறைகளை உருவாக்கி நாடு, நகரம், மொழி, இனம் என அனைத்தையும் கடந்து இயற்கையோடு இயற்கையான வாழ்க்கையை வாழ்ந்தவர்களாவர். சித் என்றால் அறிவு என்று பொருள். சித்தை உடையவர்கள் சித்தர்கள் என்றழைக்கப்பட்டனர். நிலைத்திருக்கும் பேரறிவு படைத்தவர்கள் சித்தர்களாவர். இவர்களைப்பற்றிய தகவல்கள் இவ்வாய்வில் எடுத்துரைக்கப்படுகின்றன.

சித்தர்களின் வகை

1.வன்மீகர் – எட்டுக்குடி 2. கோரக்கர் – பொய்கை நல்லூர் 3. கமல முனி – திருவாரூர் 4. குதம்பைச்சித்தர் – மயிலாடுதுறை 5. தன்வந்திரி – வைத்தீஸ்வரன் கோயில் 6. சட்டை முனி - ஸ்ரீ ரங்கம் 7. காங்கேயர் – கரூர் 8. திருமூலர் – சிதம்பரம் 9. பாம்பாட்டிச்சித்தர் – விருத்தாச்சலம் 10. இடைக்காடர் – திருவண்ணாமலை 11. பதஞ்சலி - இராமேஸ்வரம் 12. சுத்தரானந்தா – மதுரை 13. மச்சமுனி – திருப்பரங்குன்றம் 14. இராமதேவர் - பழமுதிர்ச்சோலை 15. போகர் – பழநி 16. கும்பமுனி - : அகத்தியர் – திருவனந்தபுரம் 17. கொங்கணவர் – திருப்பதி 18. நந்திதேவர் – காசி;

சித்த மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் நடத்திய மருத்துவ மாநாடு ஒன்றில் வெளியிடப்பட்ட ஆய்வு நூலில் 18 சித்தர்களின் பெயர்களும் அவர்களின் சமாதிகள் உள்ள கோவில்களும் பற்றிய தகவல்கள் இடம் பெற்றுள்ளன.

**முதலில் வரும் மூவர்**

புதினெண் சித்தர்கள் வரலாற்று நூலில் முதலில் வரும் குருதட்சணாமூர்த்தி, சுப்பிரமணிய சித்தர், நந்திதேவர் ஆகிய மூவரும் சித்தர் பரம்பரையைச் சேர்ந்தவர்களே அல்ல சித்தர் பரம்பரை தோன்றியதற்கு மூலக் காரணமானவர்கள்.

குருதட்சணாமூர்த்தி

இவர் ஆதியும் அந்தமும், அருவமும், உருவமும், அருவுவமும் அல்லாத ஞானமயமான மூலப்பரம் பொருளின் வெளிப்பாடே ஆவார். இவர் “குருதட்ணா மூர்த்தி வடிவத்தில் முதல் ஞான ஆசிரியராக வெளிப்பட்டு சனகாதி முனிவர்கள் நால்வருக்கும் கல்லால மரத்தடியில் மோன நிலையிலிருந்து சூன்யமயமான சுத்த பரஞானத்தை சொல்லாமல் சொல்லி புரிய வைத்ததே பிரபஞ்சத்தின் முதல் உபதேசமாகும்.” 1 இவர் சித்தர் பரம்பரை தோன்றுவதற்கே முதல் வித்திட்டவரவார்.

**சுப்பிரமணியர்**

சிவனாரின் தவஞான நிலையில் ஆக்ஞைபீடமான அவருடைய நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகளாக வெளிப்பட்ட ஞான ஒளிவிளக்கே சுப்பிரமணிய சித்து “பஞ்சமுகசிவத்தின் ஆக்ஞை மையத்திலிருந்து பிரபஞ்ச ஆற்றலின் உன்னத நிலையான அறுமுகச் சிவமாக இந்த சித்து வெளிப்பட்டது. இந்த சித்து மனித இதயமான அகத்திற்கு உணர்த்திய உன்னத ஞானமே சுப்பிரமணிய ஞானம்” 2 ஒரு உண்மை குரு முகமாக இந்த ஞானத்தைப் பெறுபவர்கள் யாவருமே அகத்தியர்கள் தான்.

“அகத்தியர் என்ற சொல் ஒரு காரணப்பெயர். அதை அகம் ◌ு தீ ◌ு அர் எனப்பிரித்தால் அது “ஞானத் தீயையே இதயமாகக் கொண்டவர் என்றே பொருள்படும். இந்த அகத்தீயை தன்மயமாகக் கொண்டவர் சுப்பிரமணியர். இந்த காரணப்பெயர் ‘ சு ◌ு பிரமம் ◌ு மணி ◌ு அர் எனப் பிர்pந்து தூய பரவெளிமுழுவதும் ஊடுருவி நிறைந்துள்ள இரத்தின மயமான ஞானப் பேரொளியாக உள்ளவர் என்று பொருள்படும்.”3

இவரது அகத்தீயை முழுவதுமாக உள்வாங்கி எங்கும் பிரதிபலித்துவரும் பண்பின் உருவக வெளிப்பாடே அகத்தியர். இங்கு அகத்தியம் என்பது ஒவ்வொரு மனிதனின் உண்மையான ஆன்ம தரிசனமே ஆகும். இந்த ஆன்ம தரிசனத்தை முழுமையாகப் பெற்றே ஒரு ஆன்மா வான வெளியில் நம் சூரியனைவிட பல மடங்கு அதிக ஒளியுள்ள ஒரு மகாநட்சத்திரமாக ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. அதுவே அகத்தியர் என்னும் மாமுனிவர். சுப்பிரமணிய ஞானத்தை முழுமையாகத் தெரிந்துகொள்ள உதவியாக இருப்பதே புராண அடிப்படையில் வந்த உண்மையான அகத்தியர் வரலாறு எனக்கொள்ளலாம்.

**அகத்தியர் வரலாறு**

திருவாதிரை நட்சத்திர நாயகனான திருக்கயிலாயபதி பூமியை சமன் படுத்துவதற்காக பூமியின் தென்முனைக்கு அகத்தியரை அனுப்பி வைத்தார் என்பது புராணக்கதை. உண்மையில் சிவப்பரம்பெருள் பூமிக்கு வடக்கே துவாதச பாழ்வெளிமண்டலத்திற்கு அப்பால் வெகு தொலைவில் துருவ நட்சத்திரமாய் இருந்து பூமியில் வாழும் மக்களுக்கு திசைகளை உணர்த்தி வழிகாட்டிவருகிறது. துருவ நட்சத்திரம் உள்ள வடக்கு திசையைத் துள்ளியமாக அறிந்துணர புலகர், கீரது, அத்திரி, புலத்தியர், ஆங்கிரசர், வசிஷ்டுh, மரீசி ஆகிய சப்தரிஷிகளும் உலக மக்கள் எளிதில் பார்க்கும் வண்ணம் சப்தரிஷி மண்டலமாக அமைந்திருந்து பூமியின் வடபாகத்தை – சிவப்பரம்பொருளான துருவ நட்சத்திரம் உள்ள திசையைத்துள்ளியமாகக் காண்பித்து வருகிறார்கள்

துருவ நட்சத்திரம் பூமிக்கு பாதுகாப்பாக அகத்தியரும் பூமிக்குத் தெற்கே வெகு தொலைவில் நாம் வாழும் பால்வழி நட்சத்திர மண்டலத்திலேயே மிக அதிக ஒளிமிக்க நட்சத்தரமாக இருந்து பூமியின் சமன்பாட்டைப் பாதுகாத்து வருகிறார். அவர் உள்ள இடம்

அண்டார்டிக்கா கண்டத்தை உள்ளடக்கிய பூமிக்குத் தெற்கே வெகு தொலைவில் ஆர்கோ கப்பல் என்ற ஒரு மிகப் பெரிய நட்சத்திர தொகுதி உள்ளது. அந்தக் கப்பலில் நான்கு தளங்கள் உள்ளன. நான்காவதான அடித்தளத்தில் ஆல்ஃபா ஆர்க்ஸ் என்ற நட்சத்திரம் உள்ளது. அதுவே அகத்தியர் நட்சத்திரம். இந்ந அகத்தியர் அண்டவெளியில் உள்ள அனைத்து நட்சத்திர மண்டலங்களிலும் இரண்டாவது பேரொளி மிக்க நடசத்திரமாகத் திகழ்கிறார்.

ஆல்ஃபா ஆர்க்ஸ் என்ற கிரேக்க மொழிச் சொல்லையும் அகத்தியர் என்ற தமிழ்ச் சொல்லையும் கூர்ந்து கவனித்துப் பார்த்தால் சொல் அமைப்பிலும் பொருள் நுட்பத்திலும் இந்த இரண்டு சொற்களும் பெரிதும் ஒத்திருப்பதைக் காணலாம். சான்று ஆல்ஃபா மனம் ஸ்ரீ அக மனம்.

நந்தி தேவர்

சிவன் கோவில்களிலெல்லாம் சிவலிங்கத்திற்கு நேர் எதிரில் லிங்கத்திற்கு சம உயரத்தில், லிங்கத்தையே பார்த்த வண்ணம் நந்தி தேவர் அமர்ந்திருப்பதைக் காணலாம். நந்தயின் அனுமதி பெற்றுதான் சிவதரிசனம் செய்யவேண்டும் என்பதும் நந்திக்கும் சிவலிங்கத்திற்கும் இடையே நந்திதேவரை மறைத்து நின்று சுவாமிதரிசனம் செய்யக்கூடாது. என்பதும் சைவ சமயமரபு. காரணம் “நந்தி, சிவத்திடமிருந்து பிரிக்கமுடியாத ஒரு அங்கம்”4 என்பதே.

உடல்கூற்று அடிப்படையிலேயே சிதம்பரம் முதலான பழங்கால சிவாலயங்கள் யாவும் எழுப்பட்டுள்ளன. சித்தர்கள் நெறிப்படி நந்திக்கும் சிவத்திற்கும் இடையே இடைவிடாது வாசி ஓட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த சுவாச ஓட்டத்தில் நந்தியம்பொருள், ஆக்ஞையோடியைந்த நாசித் துவாரங்களாவும் சிவப்பரம்பொருள் சகஸ்ரதளமாகவும் உள்ளன. சிவமும் நந்தியும் பிரிக்கமுடியாத ஒன்று. குருதட்சணாமூர்த்தியிடம் ஞானம் பெற்ற எண்மரில் ஒருவரான திருமூலர் இறைவனை நந்தியாகவே கொண்டுள்ளது. சிவமும் நந்தியும் வேறுவேரல்ல என்பதை உறுதி செய்கிறது.

இவற்றையெல்லாம் சேர்த்து எண்ணிப்பார்த்தால் சிவன், நந்தி, முருகன் ஆகிய மூவருமே மூலப்பரம் பொருளின் புறவடிவங்கள் தான் என்பது எளிதில் விளங்கும். பதினெண் சித்தர்களில் பெரும்பாலோர் பிரசித்த பெற்ற தமிழகக் கோவில்களில் சிவத்துடன் கலந்து அந்தந்த கோவில்களில் மூலவராக இருந்து அருளாட்சி செய்து வருகின்றனர். சில சித்தர்கள் தனித்தனியே சாமாதிக் கோவில்களும் கொண்டுள்ளனர்.

**சித்தர் இலக்கியம்**

சித்தர்கள் பல்வேறு துறைகளைச் சார்ந்த இலக்கியங்களைப் படைத்துள்ளனர். தமிழ் நாட்டில் சித்தர்கள் இயற்றினவாக இரசவாதம், மருத்துவம், மாந்திரிகம், சாமுத்திரிகாலட்சணம், கைரேகை சாத்திரம், வான சாத்திரம், புவியியல் நூல், தாவரவியல் நூல், சோதிட நூல், கணிதநூல் முதலிய துறைகளைச் சார்ந்த நூல்கள் காணப்படுகின்றன.

“சித்தர்கள் கி.பி. பத்தாம் நூற்றாண்டை ஒட்டி மிகுதியாக வாழ்ந்தனர் என்பது கா.சு பிள்ளையவர்களின் கருத்தாகும். சித்தமருத்துவத்தின் முன்னோடிகள் இவர்களே. இவர்களை ஒரு வகையில் அக்கால அறிவியல் அறிஞர்கள். இயற்கை நிபுணர்கள் என்றெல்லாம் குறிப்பிடலாம்”5 என்று தமிழண்ணல் தன் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

“மனிதர்களிடம் காணப்படாத வியக்கத்தக்க ஆற்றலைக் கொண்டவர்களைச் சித்தர்கள் என்று அழைக்கின்றனர். இவர்கள் பாடலில் மக்கள் வழக்கிற்கேற்ற மொழிநடையும், வடிவமும் தென்பட்டாலும் அவை ஆழமான பொருள் கொண்டவை”6 என்று சேதுராமன் தன் நூலில் பதிவு செய்துள்ளார்.

நாடு அமைதியற்றிருந்த காலச் சூழ்நிலையில், எந்த அரசரையும், செல்வரையும் பொருட்படுத்தாத சித்தர் என்னும் ஒரு வகை ஞானிகள் வாழ்ந்து உயர்ந்த தத்துவப் பாடல்களை எளிய சொற்களால் பாடினார்கள். இந்தக் காலத்தில் சித்தர்கள் என்ற பெயரால் ஞானிகள் சிலர் தோன்றித் தம் அனுபவ உணர்வுகளை எளிய தமிழால் பாடினார்கள்”7 என்று மு வரதராசன் தன் நூலில் பதிவு செய்துள்ளார்.

**கொங்கணவர் பிறப்பும் குடும்ப வாழ்க்கையும்**

கொங்கணவர் கொங்கு நாட்டில் சங்கர குலத்தில் உத்திராடம் நட்சத்திரம் முதல் பாதத்தில் பிறந்தார். கொங்கு நாட்டில் ஊதியூர் மலைப்பகுதியில் அவர் பிறந்து வாழ்ந்ததால் அம்மலை கொங்கணகிரி என்றும் அழைக்கப்படுகிறது.

அவருடைய தாய் தந்தையர் இரும்பை உருக்கி பாத்திரங்கள் செய்து கோயில்களின் வாயில்களில் உட்கார்ந்து விற்றுவந்தனர். அவர்கள் யோகிகளுக்கும் சாதுக்களுக்கும் மனம் உவந்து தொண்டு செய்து வந்தார்கள். கொங்கணவர் பதினாறு வயதிலேயே இரும்புப் பாத்திரங்கள் செய்வதில் நிபுணராகி விரைவில் பாத்திர வியாபாரத்தில் பெரும் வணிகரானார். திருமணம் செய்து கொண்டு சீராகக் குடும்ப வாழ்க்கையும் நடத்தினார். அதோடு முனிவர்களைப் பெரிதும் உபசரித்து வந்தார். அம்முனிவர்களும் அகமகிழ்ந்து இவருக்கு மெய்ஞ்ஞானத்தை ஊட்டிவந்தனர். அதனால் அவர் குடும்ப வாழ்க்கையைத் துறந்து துறவியானார்.

**பளிங்கரான வரலாறு**

விரைவிலேயே அவர் கூடுவிட்டுக் கூடு பாய்தல் முதலான அஷ்ட மாசித்திகளையும் பெற்று மகாசித்தரானார். “அஷ்டமாசித்திகள் - அணுவாதல், மேருவாதல், எளிதாதல், பழுவாதல், எங்குமியங்குதல், விரும்பிய இன்பம் பெறுதல், முத்தொழில் புரிதலின் முதன்மை, தன்வயப்படுத்தல்”8 என்பதை மாணிக்கவாசகர் தன்நூலில் குறிபிட்டுள்ளார். ஒரு சமயம் அவர் மலைச் சாரல்களிலுள்ள காடுகள் வழியே சென்று கொண்டிருந்தபோது மலைவாழ் பளிங்கர் இனத்தைச் சேர்ந்த ஒருவன் இறந்து கிடந்ததைக் கண்டார். அவன் இனத்தவர்கள் கதறி அழுததைக் கண்டு அவர்கள் மீது இரக்கமுற்றுத் தன் சரீரத்தைவிட்டு அந்தப் பளிங்கனின் சரீரத்தில் புகுந்து ஒரு பளிங்கனாவே மாறிவிட்டார். அவர் மறைத்துவைத்திருந்த அவரது உடலைக் கண்ட பளிங்கர்கள் அதை எரித்து சாம்பலாக்கிவிட்டனர். அது முதல் அவர் ஒரு பளிங்கனாகவே கடைசிவரை வாழ்ந்துவந்தார்.

அதன் பிறகு போகர் அவருக்கு குருவாக அமைந்தார். போகரிடம் ஞானம் பெற்றபின் அகத்தியரிடமும் சீடராயிருந்து தவ யோகத்தில் ஈடுபட்டு சித்தராகவே வாழத்தொடங்கினார்.

கொக்கை எரித்த கதை

தவயோகத்தில் முழு நிறைவு பெற்ற கொங்கணவர் ஆதிபரம்பொருளை நோக்கி நீண்ட காலம் ஆனந்த நிஷ்டையில் ஆழ்ந்திருந்தார். ஒரு நாள் விண்வெளியில் பறந்து கொண்டிருந்த கொக்கொன்று எச்சமிட அது இவர் கண்இமையில் பட்டது. அதனால் கோபக்கனல் பொங்க விழிப்புற்றவர் கொக்கை அண்ணாந்து பார்க்க அது சுட்டெரிக்கப்பட்டு எரிந்து சாம்பலாகிக் கீழே விழுந்தது. கொக்கு பற்றி காலமறிதல் அதிகாரத்தில்

குறள் - “கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்

குத்தொக்க சீர்த்த இடத்து” 9 (490) திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

பலகாலம் உணவின்றி இருந்ததால் பசி வயிற்றைக் கிள்ள அவர் அருகில் இருந்த திருவள்ளுவர் வீட்டிற்குப் பிச்சைக்குச் சென்றார். வள்ளுவர் மனைவியாகிய வாசுகி அம்மையார் கணவருக்கு உணவு பரிமாறி நிறைவாகப் பணிவிடை செய்து முடித்துவிட்டு சிறிது தாமதித்து சித்தருக்குப் பிச்சை இட வந்தார். அதனால் கோபக்கனல் தெறிக்க அந்தக் கற்பரசியைப் பார்க்க அவர் அமைதியான புன்முறுவலுடன் “கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா?” என்று கேட்க அவர் வெட்கித் தலைகுனிந்து சென்றார். இச்சம்பவம் “கொங்கணவர் வாத காவிய”த்தில் இடம் பெற்றுள்ளது.

“முக்கணர்தன் டலைநாட்டிற் கற்புடைமங் கையர்மகிமை மொழியப் போமே
வொக்குமெரி குளிரவைத்தா ளொருத்திவில் வேடனையெரித்தாளொருத்திமூவர்
பக்கமுற வமுதளித்தா ளொருத்தியெழு பரிதடுத்தா ளொருத்தி பண்டு
கொக்கெனவே நினைந்தனையோ கொங்கணவோ வென்றொருத்தி கூறினாளே”10

என்றக் குறிப்பு படிகாசுப் புலவரால் தன் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

“கெக்கெனபே நினைந்தனையோ கொங்கணவா” என்ற குறிப்புத்தொடர். தண்டலையார்

சகத்திலும் இடம் பெற்றுள்ளது.

திருமழிசை ஆழ்வார் சந்திப்பு

கொங்கணவர் வழிப்பயணத்தில் திருமழிசை ஆழ்வாரை சந்தித்தார். தான் வைத்திருந்த ரசக் குளிகையைக் காண்பித்து, இது காணி கோடியை போதிக்கும் என்றார். ஆனால் ஆழ்வாரோ தன் உடம்பின் அழுக்கைத் திரட்டிக்கொடுத்து இது காணிகோடா கோடியைப் பேதிக்கும் என்றார். கொங்கணவர் ஆழ்வாரின் பெருமையை உணர்ந்து அவரை வணங்கி விடைபெற்றுத் தன் பயணத்தைத் தொடர்ந்தார்.

**கௌதமர் தொடர்பும் நிறைநிலை அடைவும்**

கொங்கணவர் ஒரு மலை அடிவாரத்தில் அடைந்த போது அங்கே தம் உள்ளுணர்வில் இன்பமயமான தெய்வீகத் தோற்றங்கள் பலவற்றைக் கண்டார். அதோடு இனிமையான பல வாத்திய ஒலிகளையும் கேட்டார். அதைத் தொடர்ந்து அங்கே கௌதம ரிஷி ஒரு சமாதியிலிருந்து வெயிப்பட்டார். அவர் உபதேசம் பெற்ற கொங்கணவர் தம் தவவலிமையை மேலும் பெருக்கிக் கொள்ள பனிரண்டு ஆண்டுகள் கடுந்தவம் புரிந்தார். மிகக் தவ வலிமையுடன் வெளிப்பட்ட கொங்கணவர் ஒரு சர்வசக்தி வாய்ந்த ரிஷியாக உயர வேண்டும் என்ற ஆசையில் ஒரு யாகம் செய்யத் தொடங்கினார். அப்போது ஒளி உடலுடன் அவர் முன் தோன்றிய கௌதமர், தகுதிக்குமேல் ஆசைப்பட்ட கொங்கணவரை சபித்துவிட்டார். கொங்கணவர் கௌதமரை வணங்கி சாபவிமோசனம் கேட்க, முனிவர் “ சாபவிமோசனம் பெறதில்லை வனத்திற்குப் போ” என்று கூறிவிட்டு மறைந்தார்.

தில்லைவனம் சென்ற கொங்கணவர் முன் பராசர முனிவர் தோன்றி சாபவிமோசனம் அளித்தார். அதன்பிறகு கௌதமர் அங்கு தோன்றி யாகம் செய்யவரமளித்தார். இவ்வளவு நல்வரங்கள் பெற்ற நிலையிலும், கொங்கணவர் தம் குருவின் ஆணைப்படி திருமாளிகைத் தேவரிடம் சென்று நிர்வாணத் தீட்சை முதலான பல அரிய தீட்சைகளைப் பெற்று உயர்ந்த சித்தராக ஓரிடத்தில் தங்கி வாழ்ந்தார். அங்கு அவரிடம் 500க்கும் அதிகமாக சீடர்கள் சேர்ந்தார்கள். அவர்கள் அனைவரும் ஞானமார்க்கத்திலும் குளிகை மார்க்கத்திலும் தோச்சி பெற்று சிறந்து விளங்கினார்கள்.

**திருப்பதி சென்று சமாதி கூடல்**

தமக்கு சமாதி கூடும் காலம் கூடிவந்துவிட்டதை உணர்ந்த கொங்கணவர் திருத்திணிகை சென்று வீரட்டகாசமூர்த்தியின் தலைமேல் தம் குளிகையை வைத்தார். லிங்க வடிவில் இருந்த அந்த சிவமூர்த்தி அக்குளிகையை நீராக்கி அழித்து விடாமல் தம்முள் ஈர்த்து மறைத்துக் கொண்டார். தன் தவறை உணர்ந்த சித்தர் சிவபெருமானைப் பணிந்து வழிபட்டு தம் குளிகையைத் திரும்பப்பெற்றார். அதன் பிறகு நேரே திருப்பதி சென்று திருவேங்கடமலை மீது தங்கி தவத்தைத் தொடங்கினார். அப்போது வனேந்திரன் என்ற சிற்றரசன் அவரிடம் வந்து சீடனானான். அவனுக்கு ஏற்ற எளிய முறையில் தவ வாழ்க்கையை அமைத்துக்கொடுத்துவிட்டு அங்கேயே ஜீவ சமாதி அடைந்தார். இப்போது அவர் திருப்பதி மலைமீது அருள்மிகு வெங்கடேசப் பெருமாளாக இருந்து கோடிக்கணக்கான பக்தர்களின் குறைகளைத் தீர்த்து வருவதுடன் நாடி வருபவர்களுக்கெல்லாம் வளமான வாழ்வளித்தும் வருகிறார்.

**முடிவுரை**

கொங்கணவர் பற்றிய பல அறிய தகவல்கள் இக்கட்டுரையின் மூலம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. எஸ். கோபால கிருஷ்ணன் - பதினெண் சித்தர்கள் வரலாறு – முன்னுரை ப – 4

2. எஸ். கோபால கிருஷ்ணன் - பதினெண் சித்தர்கள் வரலாறு – முன்னுரை ப – 5

3. எஸ். கோபால கிருஷ்ணன் - பதினெண் சித்தர்கள் வரலாறு – முன்னுரை ப – 5

4 எஸ். கோபால கிருஷ்ணன் - பதினெண் சித்தர்கள் வரலாறு – முன்னுரை ப – 7

5. தமிழண்ணல் - தமிழிலக்கிய வரலாறு – ப – 386

சி. சேதுராமன் - தமிழிலக்கிய வரலாறு – ப – 213

7. மு. வரதராசன் - தமிழிலக்கிய வரலாறு – ப – 189

8. மாணிக்கவாசகர் - திருவாசகம் ப – 29

திருவள்ளுவர் - திருக்குறள் ப – 101 - (குறள் - 490)

படிகாசுப்புலவர் - தண்டலையார் சதம் ப – 4

**துணைநூற்பட்டியல்**


1. எஸ். கோபால கிருஷ்ணன் - பதினெண் சித்தர்கள் வரலாறு பிருந்தாவனம் பதிப்பகம். 323ஃ10. கதிரவன் காலணி அண்ணா நகர் மேற்கு சென்னை பதிப்பு – 2007
2. தமிழண்ணல் - புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு மீனாட்சி புத்தக நிலையம், மதுரை – பதிப்பு 2002
3. சி. சேதுராமன்-தமிழிலக்கிய வரலாறு பாவை பப்ளிகேஷன்ஸ் - சென்னை பதிப்பு – 2012
4. மு. வரதாசன் - தமிழ் இலக்கிய வரலாறு சாகித்திய அக்காதெமி, புதுதில்லி பதிப்பு – 2000
5. மாணிக்கவாசகர் - திருவாசம், மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை. பதிப்பு – 2011
6. திருவள்ளுவர் – திருக்குறள் - ஞா. மாணிக்கவாசன் உரை உமா பதிப்பகம், பதிப்பு – 1991
7. படிகாசுப்புலவர் – தண்டலையார் சதகம் - மதுரை தமிழ்ச் சங்கம், செந்தமிழ் பிரசுரம் - 1921